www.tamilarangam.net

19.09.92

# பிரியமான உங்களுக்கு,
# ஈ.பி.டி.பி. யிட மிருந்து...
# TO THE LOVING PEOPLE
# FROM THE EPDP......



★ நிலையான - வலுவான அரசாங்கத்திற்காக.
★ எமக்குள் எம் பிணக்குகளைத் தீர்க்க.
★ இனவாதம் - பாசிசம் - சுயலாபஅரசியல் துடைத்திட.

தேசிய ஐக்கியம் - தேசிய நலன் காக்க
ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்போம்.

- For a Stable and Virile Government.
- To Resolve our Problems Within us.
- To wipe Out Communalism, Fascism, Self - Seeking Politics.

*To Uphold National Unity - National Interest.*

***WE SUPPORT***

***The United National Party***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரியமான உங்களுக்கு!

வணக்கம்.

நம்மிடம் அற்புதமான ஆயுதம் இருக்கிறது கவசம் இருக்கிறது. இவை வலுவானவையும் கூட!

தேசிய ஒற்றுமை — ஆயுதம்
தேசிய நலன் — கவசம்

இவற்றை நாங்கள் பூணவிடாமல், நாங்கள் தாங்க விடாமல் இனவாத இருளில் தட்டிப் பறித்தது யார்?

சுயநல அரசியல் வாதிகள்!

சந்தர்ப்பவாத அரசியல் சக்திகள்!

எனவே - இதனால் - இந்த நாடு இரத்தம் பார்த்தது.

எனவே - இதனால் - இந்த நாடு இனவாத மலம் மிதித்து முகம் சுளித்தது.

எனவே - இதனால் - இந்த நாடு யுத்த பாரம் தாங்கிற்று.

உலகின் முகம் வேகமாக மாறி வருகிறது. புதிய சிந்தனைகள் பூத்து மலர்ந்து சிறகு விரிக்க மனித வாழ்க்கை விஞ்ஞான வெளிச்சத்தில் புதிய சிகரங்களை தரிசித்துக்கொண்டிருக்கின்றது.

வாழ்க்கை வாழ்வதற்கே. அதன் இனிதான பக்கங்களை சுவைப்பதற்கே.

இனவாதம் - மதவாதம் - பழமைவாதம் என்னும் மாயமான்கள் மனித வாழ்வைக் குறி தவறிக் கொண்டு செல்லும். உலகம் இதனை உணர்ந்து வருகிறது. இதனால் வளர்ந்து வருகிறது.

இங்கே - நாங்கள் - இனவாதத்தால் நிராயுதபாணிகளாகி, கம்பீரமாய் தலை உயர்த்தும் உலகம் முன் தலை குனிந்து நிற்கிறோம்.

பிரிந்த நாடுகள் நெருங்கிவந்து, ஒருமித்த பலமுணர்ந்து கலக்கின்றன.

இங்கே - நாங்கள் - இனவாதத்தால் பிணக் காடுகளை உருவாக்குபவர்கள் முன் நடைப்பிணங்களாய் நிற்கிறோம்.

எனவே - நாங்கள் - இங்கே கவசம் பூணுவோம். ஆயுதம் தாங்குவோம்.

இனவாத அழுக்குக் குட்டையில் மீன் பிடிக்க அந்நிய சக்திகள் வரலாம். அந்த அழுக்குக் குட்டையையே அடையாளம் தெரியாமல் ஆக்குவோம்.

www.tamilarangam.net

எம் மக்களே!

வடக்கு - கிழக்கிலே வாலாட்டுகின்ற, மக்களை மிதித்து, தமிழ் மக்களை யுத்த முனையில் கேடயமாக்கி தம் மேலாதிக்க வெறித்தனம் புரிகின்ற பாசிச எல். ரீ. ரீ.க்கு தேவை என்ன?

சூடிக்கொள்ள முடி!
தனி அதிகாரம் செலுத்த சிம்மாசனம்!

இதற்கு விலை இந்த நாட்டின் தமிழ் - சிங்கள - முஸ்லீம் மக்களது குற்றமற்ற குருதி.

புலிகளோடு பேசித் தீர்க்க ஜனாதிபதி பிரேமதாசா காட்டிய பொறுமை பூரண மானது.

இதுதான் - கடந்த கால அரசாங்கங்களில் இருந்து - இன்றைய அரசாங்கத்தை வேறுபடுத்திக் காட்டிற்று.

இதுதான் - ஜனாதிபதி பிரேமதாசாவின் பொறுப்புணர்வைப் புரியவைத்தது.

இதுதான் - எங்களை இன்றைய அரசாங்கத்திற்கு ஆதரவாகக் கொண்டுவந்து நிறுத்திற்று.

இன்று - யுத்தத்தை நிறுத்து - பேசு என்று சொல்லும் கட்சிகள் எல்லாம் அன்று பேசாதே என்று பேசின.

ஒருபடி மேலாய் புலியோடு பேசவேண்டாம் என்று ஜனாதிபதி பிரேமதாசாவை கண்டித்த சிறீலங்கா சுதந்திரக்கட்சி, தனது வாக்கு வங்கியை நிரப்பிக்கொள்ள, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் புலியோடு பேச வன்னிக்காடு போனது.

தாம் பதவி நாற்காலிகளைப் பிடிக்கும் பாதையில் மட்டுமே சிந்தனையைச் செலுத்தும் கட்சிகளால் தேசியப் பிரச்சனைகளை தீர்க்கும் திசைகள் அறிய முடியாது.

இன்றும் - இப்போதும் கூட ஜனாதிபதி பிரேமதாசா பேச வாருங்கள் என்று புலிகளை அழைக்கிறார்.

முடியாது - முடிசூடிக்கொள்வதுதான் குறி என்று போர் முனைப்பு காட்டி - அப் பாவி சிறுவர்களை பலிபீடத்தில் அள்ளிப்போடுகிறது பலியாய் புலி!

இப்போதும் - அரசாங்கத்தைப் பார்த்து நிறுத்து! யுத்தம்! என்றால் பொருள் என்ன?

புலியிடம் நாட்டின் ஒரு பகுதியை பலியிட்டு விட்டு கைகட்டி நின்று பார். அப்போது சுலபமாய் கண்டனம் ஏவி பதவி கதிரையை நாங்கள் கைப்பற்ற வசதி செய் என்பது தானே பொருள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணாமல் போன செல்வாக்கை மீட்க கண்ணாடி வீட்டில் இருந்து கல்லெறிந்து விளையாடுகிறது சுதந்திரக் கட்சி!

இன்றைய அரசாங்கம் புலிகளுக்கு ஆயுதம் கொடுத்தது என்று சொல்லும் நீங்கள் தானே அந்த ஆயுதம் ஏந்தவே எங்களை நிர்ப்பந்தித்தவர்கள்.

ஆயுதம் ஏந்தாமல் குரல் உயர்த்திய தமிழ் இளைஞர்களை வருடக்கணக்கில் சிறைக் கொட்டடிகளில் பூட்டி வைத்து, அமைதி வழி மீது அவநம்பிக்கை ஏற்படுத்தியவர்கள் நீங்கள் தானே!

அன்றைக்கு நீங்கள் - இன்றைய அரசாங்கம் போல் நட்புக்கரம் நீட்டவில்லை. குண்டாந்தடியை நீட்டினீர்கள்.

எனவே - இன்று தமிழ் - சிங்கள இளைஞர்களின் சிந்தும் குருதி குற்றம் சொல்வது யாரை? உங்களையல்லவா!

ஜே. வி. பி. பாசிசத்திற்கு எதிராக இன்றைய அரசாங்கம் போராடியது கொடுமை என்று நீங்கள் கூறலாம். கண்ணீர் காட்டி விளம்பரம் தேடலாம்.

அப்படியெனில் 1971ல் இதே ஜே. வி. பி. மீது உங்கள் தலைமையில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பொருள் என்ன? அன்று நீங்கள் அவர்களையழைத்து அதிகாரம் கொடுத்துவிட்டு சுலபமாய் போய் இருக்கலாமே. செய்யவில்லையே சிறிமா அம்மையாரே நீங்கள்!

நீங்கள் சுட்டு விரல் காட்டிப் பேசும்போது எல்லாம் மீதி நாலு விரல்களும் உங்களை நோக்கி குறிவைப்பதைப் புரிந்து - இனி எனினும் பொய் விற்பதை நிறுத்துங்கள்.

அது ஒரு காலம் - கண்ணுக்கெட்டாத தொலைவுவரை அரை இறாத்தல் பாணுக்காய் - பால் மாவுக்காய் நீண்ட கியூ வரிசைகள்.

அது என்ன பொற்காலமோ?! அப்படி எனில் அதுவே போதும்! மீண்டும் அது திரும்பிவர அங்கீகாரம் தரமாட்டோம்.

நீலவர்ண அலங்காரங்கள் மைதானம் மறைக்கலாம். பட்ட காயங்கள் மறக்குமோ!

எனவே, மக்களே! சந்தர்ப்பவாத அரசியலை அப்புறப்படுத்துவோம்.

தேர்தல் முதல் தேசத்தின் பிரச்சனைகள் வரை ஐக்கியம் - தேசிய ஐக்கியம் என்ற தளத்திலிருந்து அணுகுவோம்.

இனவாதம் - பாசிசம் அவை எந்த மொழியைப் பேசுகின்றன என்பதல்ல பிரச்சனை. இவையனைத்தும் எங்களை குறிதவறி - படுகுழிக்கு இழுத்துச் செல்கின்றன என்பதே மெய்யாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவேதான் - எதிர்வரும் தேர்தலில் இந்த நாட்டை கம்பீரமாய் முன் செல்ல வைக்க, தடைக்கற்கள் அகற்ற சந்தர்ப்பவாதிகளுக்காகக் காத்திராமல், எந்த அந்நிய நாடும் பொலிஸ்காரன் வேலை செய்ய பொறுத்திராமல் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண,

ஒரு தெளிவான ஆணையை :-

மீண்டும் —

இங்கே —

## ஐக்கிய தேசியக் கட்சி

பெற்றிடும் வகையில்

மே 11ல் — உங்கள் தீர்ப்பு அமைந்திட வேண்டும்.

நிலையான - வலுவான அரசாங்கம்

இதுவே,

★ பாசிசத்தின் பலம் அடக்கி தேசம் காக்க,

★ அந்நிய சக்திகள் தலையீடல் தடுக்க,

★ இனப் பிரச்சனை தீர்க்க,

★ தேசம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை முகம் கொடுத்து முன்செல்ல,

- இன்று தேவை -

நிலையான - வலுவான அரசாங்கம்!

— என்றும் அன்புடன் —

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

There is a wonderfull weapon with us, there is also a shield, they are powerfull tool

**National unity is the weapon**

**National interest is the shield.**

Who has plundered them in the communal darkness preventing us from making use of them.

**It is the self - seeking politicians.**

Opportunistic political forces as such this country saw blood. This country trampled communal excretia and changed face, this country shouldered the burden of war.

The face of the world is changing fast.

Human life is touching new peaks through new scientific light while new ideologies are blooming.

Life is for living its sweet chapters are to be enjoyed.

Deception of communalism, religious fanaticism, conservertism will mislead humanity the world understands this therefore it is progressing.

But here we stand heads down unarmed by communalism in the face of the world which stands head fast.

Countries which stood divided are coming close realising the strength of unity here we stand like moving corps in front of those who create cemetries through communalism.

Therefore we will wear shields and take to arms.

Foreign powers may come to fish in the dirty troubled waters created by communalism we would abolish these dirty troubled waters beyond recognition.

## Our people

What does the L. T. T. E. which tramples the people of the North - East and make use of them as human shields in the war front want.

### A crown for themselves

A throne to establish there hegemony the price for this is the flawless blood of the Tamil - Singhala - Muslim people of this land.

The patients shown by His Excellency President Premadasa is in full, this differentiates the present government from all previous governments this is proof of the responsiblity shown by the president, this is what has brought our party to stand in support of the government.

Those parties which say stop the war and talk are those who said then, do not talk. The Sri Lanka Freedom Party which Condemned president Premadasa and said don't talk to the L. T. T. E. ran behind the L. T. T. E. to the jungles of Vanni to fill their ballot banks.

It is difficult to realise the direction of solving national issues of national importance of parties that are only bent in capturing the seats of power.

President Premadasa even now, at this very moment is inviting the L. T T. E. for talks, the L. T. T. E. which is heaping teenagers as prey refuses by show of interest in war as the only aim is crowning themselves.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

At this stage one fails to understand the call to stop the war.

To say, handover part of the country to the L. T. T. E. and watch hands folded, would only mean that the seats of power could be captured by mere condemnation of the government.

The Sri Lanka Freedom Party is engaged in throwing stones from a glasshouse in order to redeem its lost prestige.

You who accuse the present government of having supplied the L. T. T. E. with arms are the very people who forced us to take to arms.

You are those who locked up Tamil youth who raised their voice without taking to arms in prison for years and made them loose confidence in traversing on the path of peace.

You unlike the present government stretched the baton instead of stretching the hands of friendship.

As such the blood shed by Tamil - Singhala youth blame you.

You may say that the struggle of the present government against the fascist J. V. P. is Cruel your intention might be advertisement by the shedding of crocodile tears.

If so what is the meaning of actions taken under your leadership against the J. V. P. in 1971. You could have invited them handed over power to them and abdicated. Madam Sirimavo you failed.

When you point a finger in accusation four fingers are pointed at you, please stop the sale of lies.

Very long ques for half a loaf of bread and a packet of milk food was a common sight if this was the socalled golden era, enough of it we would not permit its return.

Decoration in blue might cover the ground but the wounds continue to remain in memory.

Let us get rid of opportunistic politics.

Let us approach all national issues commencing with the election on the basis of unity, national unity.

Does not matter which language fascism, Communalism, speaks these forces will mislead us down the precipise.

As such in order this government marches head above on the path of progress to remove all obstacles, to find a lasting solution without paving way for any Foreign power playing a policemen role.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# So that
# The United National Party

## Gets a clear mandate once again.

This should be your clear verdict on the 11th of May.

- ★ For a Stable - virile government it should be to save the nation; by destruction of the powers of fascism.
- ★ To prevent the interfearence of foreign powers;
- ★ To solve the ethnic problem.
- ★ To face the problems of the nation and march forward;

What is wanted this day is a stable virile government.

— With Love —

## EELAM PEOPLE'S DEMOCRATIC PARTY
## (E. P. D. P.)

கொழும்பு-5, இல. 22, சிரிபா லேனில் வசிக்கும் என். ரமேஸ் அவர்களால் இல. 201, டாம் வீதி, குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
(பொது இடங்களில் ஒட்டக்கூடாது.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்